**04.03.2024 அ.வ.எண்.132/2003 மற்றும் 11/2007**
**பி.வா.சா.1, நடராஜன் த/பெ. கோவிந்தசாமி**

**குறுக்கு விசாரணை**

நானும், கண்ண பிள்ளை என்பவரும் வழக்கு சொத்து சம்மந்தமாக நாராயணசாமி என்பவருக்கு எதிராக ஏற்கனவே வழக்கு சொத்து சம்மந்தமாக அ.வ.எண்.122/2003-ன்படி வழக்கு தாக்கல் செய்திருந்தோம் என்பது சரிதான். அந்த வழக்கு தவறுகைக்காக தள்ளுபடி ஆகிவிட்டது என்பது சரிதான். அந்த வழக்கை மீண்டும் கோப்புக்கு எடுக்க மனு தாக்கல் செய்தேனா என கேட்டால் செய்தேன். அந்த மனு எண் மற்றும் வாய்தா தேதி எனக்கு தெரியாது. அந்த மனுவை எந்த வருடம் தாக்கல் செய்தேன் என்பது ஞாபகமில்லை. பின்னிட்டு நாராயணசாமி அ.வ.எண்.132/2003 வழக்கை தாக்கல் செய்து கிரய ஒப்பந்தப்படி கிரயம் எழுதிக் கொடுக்க கேட்டார் என்றால் அவர் வழக்கு தாக்கல் செய்த விவரம் தெரியாது. வழக்கு சொத்துகளை நான் கிரயம் வாங்கியுள்ளேன் அவை என் பெயரில் உள்ளன அதனால் அவற்றின் பக்கம் பிரதிவாதிகள் வரக்கூடாது என வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் எனது வழக்கை கண்ண பிள்ளை மற்றும் நாராயணசாமி பிள்ளை ஆகியோருக்கு எதிராக தாக்கல் செய்தேன். நான் தாக்கல் செய்த முன் வழக்கையும் இந்த இரண்டு வழக்குகளையும் ஒன்றாக விசாரணை செய்ய உத்தரவானது என்பது சரிதான். 26.11.2006 அன்று நான் கிரயம் வாங்கினேன். நாராயணசாமி தாக்கல் செய்த அ.வ.எண்.132/2003-ல் கண்ண பிள்ளை வழக்கு சொத்தை யாருக்கும் விற்க கூடாது என தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. அ.வ.எண்.132/2003-ல் ஏற்கனவே ஒருதலைப்பட்ச தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டு அதன் அடிப்படையில் நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டது என்றால் அந்த விவரமும் எனக்கு தெரியாது. அந்த வழக்கில் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்ட பிறகு நானும், கண்ண பிள்ளையும் சேர்ந்து கூட்டு சதி செய்து என் பெயரில் கிரயப்பத்திரத்தை உருவாக்கினோம் என்பது சரியல்ல. வழக்கு சொத்துகளில் கிணறு ஏதுமில்லை. அவற்றிற்கு ஏரி பாசனமும் இல்லை என்பது சரிதான். மனாவரி பயிர் ஒரு போகம் மட்டும் செய்ய இயலும். வழக்கு சொத்துகளை தவிற எனக்கு வேறு நிலம் ஏதுமில்லை. வழக்கு சொத்துகளை ஒட்டி நாராயணசாமி பிள்ளைக்கு கிணறு பம்புசெட்டுடன் ஏழு ஏக்கர் நிலம் உள்ளது என்பது சரிதான். வழக்கு சொத்துகளின் வழியாக பிவிசி பைப் மூலம் நாராயணசாமி தனது நிலங்களுக்கு பாசனம் செய்தார் என்பது சரிதான். வழக்கு சொத்துகளுக்கு கிழக்கில் நாராயணசாமியின் நிலங்கள் உள்ளது. நாராயணசாமி தனது கிணற்றிலிருந்து வழக்கு சொத்துகளுக்கு 17 ஆண்டுகளாக பாசனம் செய்து பயிர் வைத்து அனுபவித்தார் என்றால் அது சரியல்ல. என் தந்தைக்கு ஒரு ஏக்கர் நிலம் இருந்தது அதனை எனது தம்பிகள் இருவருக்கும் 1990-ம் ஆண்டில் கிரயம் கொடுத்துவிட்டேன். அதன் பிறகு 20 வருடங்கள் பால் வியாபாரம் செய்தேன். நான் கூலிவேலைதான்

செய்கிறேன் என்றும் வழக்கு சொத்துகளில் நாராயணசாமி அனுபவம் செய்தது தெரிந்திருந்தும் அதற்கு மாறாக பொய் சொல்கிறேன் என்பது சரியல்ல. நான் மரம் வெட்டும் கூலிவேலைக்கு செல்வதில்லை. என் தம்பிகள் செல்வார்கள். நான் எனது கிராம திமுக கிளை செயலாளராக உள்ளேன் என கேட்டால் 30 வருடமாக உள்ளேன். வழக்கு சொத்துகளை கிரயம் பெற ரூ-50,000/- கொடுத்தேன். அதனை ரொக்கமாக கொடுத்தேன். அதற்கு ஆதாரம் உள்ளதா என கேட்டால் இல்லை. 2003-ம் ஆண்டிலேயே நானும், கண்ண பிள்ளையும் சேர்ந்து அ.வ.எண்.122/2003 வழக்கை தாக்கல் செய்தபோது வழக்கு சொத்துகளை நான் கிரயம் வாங்கியிருக்கவில்லை. எனவே, நாராயணசாமி பிள்ளை வழக்கு சொத்துகள் சம்மந்தமாக கிரய ஒப்பந்தம் கண்ண பிள்ளையிடம் செய்திருந்த விவரம் எனக்கு முன் வழக்கு தாக்கல் செய்தபோதே தெரிந்திருந்தது என்றும் அதனையும் மீறி நான் கிரயப்பத்திரம் எழுதி பெற்றுள்ளேன் என்றும் கிரய ஒப்பந்தத்தை தோற்கடிக்க நானும், கண்ண பிள்ளையும் நாமகார்த்தமாக கிரயப்பத்திரம் உருவாக்கியுள்ளோம் என்றும் சொன்னால் அது சரியல்ல. தனது மருத்துவ செலவுகளுக்காக கண்ண பிள்ளை எனக்கு சொத்துகளை விற்றார். கிரயம் வாங்கும் முன்னர் கண்ண பிள்ளை பேரில் இருந்த உரிமை ஆவணங்களை பார்க்கவில்லை. எனது கிரயப்பத்திரத்திற்கு சாட்சி போட்டவர்கள் பாண்டியன், சுப்பிரமணி, ரவி மற்றும் வெள்ளை ஆகியோர் ஆவர். அவர்களில் பாண்டியன் இறந்துவிட்டார். கண்ண பிள்ளையின் மகள் ஜோதி என்பவரும் சாட்சி போட்டுள்ளார். நான் கிரயம் பெறுவதற்கு முன்னர் கிரய ஒப்பந்தம் ஏதும் எழுதிக்கொள்ளவில்லை. கண்ண பிள்ளையின் மகள் மற்றும் மருமகனோடு எனக்கு விரோதம் ஏதுமில்லை. பூங்காவனம் என்பவர் நாராயணசாமியின் அண்ணன். மழையூர் இளங்கோவன் என்பவரை தெரியும். எடப்பேட்டை ஜெயராமன் என்பவரையும் எனக்கு தெரியும். வெங்கடாபுரம் பெருமாள் என்பவரை தெரியும். அவர் வாதிகள் தரப்பு ஒரு சாட்சி என்றால் அது விவரம் எனக்கு தெரியாது. வழக்கு சொத்துகள் 2007 முதல் இன்றுவரை பயிர் செய்யபடாமல் கரம்பாக உள்ளன என்பது சரிதான். 1990 முதல் 2007 வரை நாராயணசாமி தனது கிணறு மூலம் வழக்கு சொத்துகளில் மூன்று போகம் பயிர் வைத்தார் என்பது சரியல்ல. கண்ண பிள்ளை நாராயணசாமிக்கு கிரய ஒப்பந்தம் எழுதிக்கொடுத்த அன்றே வழக்கு சொத்துகளின் அனுபவத்தையும் ஒப்படைத்துவிட்டார் என்பது சரியல்ல. அவ்வாறு சுவாதினம் கொடுக்கவில்லை என்பது எனக்கு எப்படி தெரியும் என கேட்டால் அந்த வழியில் சென்று வந்த வகையில் எனக்கு தெரியும். கண்ண பிள்ளையின் மகள் ஜோதி சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்ய மீண்டும் அழைக்க கேட்டு மனு தாக்கல் செய்தார் என்பது சரிதான். அவ்வாறு அனுமதி பெற்றும் ஏன் சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்யவில்லை என ஜோதியிடம் கேட்டேனா என கேட்டால் - இல்லை. எனது தூண்டுதலின் பேரில்தான் ஜோதி மனு தாக்கல் செய்தார் என்றும் மற்றபடி அவருக்கு வழக்கு நடத்தும் ஆர்வம் இல்லை என்றும் சொன்னால் அது சரியல்ல. ஏற்கனவே முன் வழக்கு தாக்கல் செய்து வழக்கு சொத்து சம்மந்தமாக வில்லங்கம் உள்ளதை அறிந்திருந்தும் பின்னர் நாராயணசாமி தாக்கல் செய்த வழக்கு நிலுவையிலிருந்தபோதும்

ஏன் வழக்கு சொத்துகளை கிரயம் பெற்றேன் என கேட்டால் கிரயம் கொடுப்பதாக கண்ண பிள்ளை சொன்னார் அதனால் கிரயம் வாங்கினேன். அ.வ.எண்.132/2003-ன் வாதி தரப்பு சாட்சிகளை நான் குறுக்கு விசாரணை செய்யவில்லை என்பது சரிதான்.